# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 245/8 A — 1976 දෙසැම්බර් 30 වැනි බ්‍රහස්පතින්ද — 1976.12.30

245/8 A ஆம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

ச.வ.—பீ.77/42

**கொழும்பு மாநகரசபை**

*நீர்வேலைகள் கட்டளைச்சட்டம்*

(208 ஆம் அத்தியாயமான) கொழும்பு மாநகரசபை நீர்வேலைகள் கட்டளைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு மாநகரசபையினால் ஆக்கப் பட்டதும், சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான ஒழுங்குவிதி.

சீ. ஈ. எம். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1976 ம் ஆண்டு டிசெம்பர் மீ 24 ந் உ.

**ஒழுங்குவிதி**

(208 ஆம் அத்தியாயமான) கொழும்பு மாநகரசபை நீர்வேலைகள் கட்டளைச் சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள், இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :—

(1) அதன் 32 ஆம் ஒழுங்குவிதியில்—

(அ) அதன் (ஈ) என்னும் பந்தியில் " வைத்திருப்பதற்கு " என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக " வைத்திருப்பதற்கு " என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும், அத்துடன்

(ஆ) அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (உ) எத்தொழிலுக்கு நீர் பயன்படுத்தப்படுகின்றதோ, அத்தொழில் எதற்கும்.";

(2) அதன் 33 ஆம் ஒழுங்குவிதியில், அதன் (அ) என்னும் பந்தியில், " நீச்சல் தொட்டிகள் " என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக,; " ஏதேனும் தொழில் தொடர்பில் பயன்படுத்தப்படாத நீச்சல் தொட்டிகள் ;" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்.";

(3) அதன் 34 ஆம் ஒழுங்குவிதியில்—

(அ) அவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில்—

(i) (அ) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப்பின்வரும்புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

" (அ) (i) ஏதேனும் வியாபாரத்தை அல்லது உற்பத்தித் தொழிலை நடாத்தும் அல்லது கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக

(ii) ஹோட்டல், உணவுச்சாலை, விடுதி அல்லது தனியார் தங்குமிடம் என்பவற்றின் நோக்கத்திற்காக

(iii) பொதுசன குளிப்பிடமொன்றாக ;

(iv) விற்பனைக்கென அல்லது வாடகைக்கென குதிரைகள், கால்நடைகள் அல்லது வாகனங்களை வைத்திருப்பதற்காக ;

(v) நீர் பயன் படுத்தப்படும் வேறு ஏதேனும் தொழிலின் நோக்கத்துக்காக,

முழுதாகவோ, பகுதியளவிலோ குடியிருக்கப்படும் வளவுகளுக்கு, கனமீட்டருக்கு ரூ. 1.10 சதம் அல்லது 1,000 கலன்களுக்கு ரூ. 5.00 என்ற வீதத்தில்,

(ii) (ஆ) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

" (ஆ) (i) எவ்வளவுகளின் மீது ஏதேனும் தொழில் தொடர்பில் பயன்படுத்தப்படாத நீச்சல் தொட்டிகளுக்கு நீர் பயன்படுத்தப்படுகின்றதோ, அவ்வளவுகளுக்கு கனமீட்டருக்கு 55 சதம் அல்லது ஒவ்வொரு 1,000 கலன்களுக்கு ரூ. 2.50 சதம் ;

(ii) எவ்வளவுகளின் மீது ஏதேனும் வியாபாரம் தொடர்பில் பயன்படுத்தப்படாத நீரூற்றுக்கள், நீராற்றலாலியங்கும் விசைப்பொறி என்பவற்றிற்கு நீர் பயன்படுத்தப்படுகின்றதோ அவ்வளவுகளுக்கு கன மீட்டருக்கு 55 சதம் அல்லது 1,000 கலன்களுக்கு ரூ. 2.50 சதம் ;

(iii) எவ்வளவுகளின் மீது கட்டடங்களை அமைத்தல், வீதிகள் அமைத்தல், வீதிகளைப் பழுதுபார்த்தல் ஆகிய நோக்கங்களுக்கு நீர் பயன்படுத்தப்படுகின்றதோ அவ்வளவுகளுக்கு கன மீட்டருக்கு ரூ. 1.10 சதம் அல்லது 1,000 கலன்களுக்கு 5 ரூபா ;";

(iii) (இ) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

(அ) வதியும் நோக்கங்களுக்கென முழுவதாக குடியிருக்கப்படுபவையும், அவற்றின்மீது நீரானது தோட்டங்களுக்கும், முற்றங்களுக்கும் நீர்ப்பாய்ச்சுவதற்காகப் பயன்படுத்தப்படுபவையுமான வளவுகளுக்கு பின்வருமாறு கட்டணமின்றி அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாகப் பயன்படுத்தப்படும் அளவு எதற்கும் கனமீட்டருக்கு ரூ. 1.10 சதம் அல்லது 1,000 கலன்களுக்கு 5 ரூபா :

காலாண்டொன்றுக்கு கட்டணமின்றி அனுமதிக்கப்படும் நீரின் அளவு—

| | கன மீட்டர்கள் | கலன்கள் |
|---|---|---|
| (i) 2,000 ரூபாவுக்குக்குறைந்த ஆண்டுப் பெறுமதியுடையவளவுகள் .. | 150 | .. 33,000 |
| (ii) 2,000 ரூபாகொண்டதும், 3,000 ரூபாவுக்குக் குறைவானதுமான ஆண்டுப் பெறுமதியுடைய வளவுகள் .. | 180 | .. 39,600 |
| (iii) 3,000 ரூபாக்கொண்டதும், 4,000 ரூபாவுக்குக் குறைவானதுமான ஆண்டுப் பெறுமதியுடைய வளவுகள் .. | 200 | .. 44,000 |
| (iv) 4,000 ரூபாக்கொண்டதும், 6,000 ரூபாவுக்குக் குறைவானதுமான ஆண்டுப் பெறுமதியுடைய வளவுகள் .. | 220 | .. 48,400 |
| (v) 6,000 ரூபாக்கொண்டதும், 8,000 ரூபாவுக்குக் குறைவானதுமான ஆண்டுப் பெறுமதியுடைய வளவுகள் .. | 270 | .. 59,400 |
| (vi) 8,000 ரூபாக்கொண்டதும், 10,000 ரூபாவுக்குக் குறைவானதுமான ஆண்டுப் பெறுமதியுடைய வளவுகள் .. | 340 | .. 74,800 |
| (vii) 10,000 ரூபாக்கொண்டதும், அதற்கு மேற்பட்டதுமான ஆண்டுப் பெறுமதியுடைய வளவுகள் .. | 450 | .. 90,000 |

(iv) அதன் (ஈ) என்னும் உட்பந்தியில், " 1,000 கலன்களுக்கு 50 சதம் " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக " கன மீட்டருக்கு 55 சதம் அல்லது 1,000 கலன்களுக்கு ரூ. 2.50 சதம் என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.";

(ஆ) அதன் (2) ஆம் (3) ஆம் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :—

" (2) கப்பற்றெழிலுக்கென மானி மூலம் வழங்கப்படும் நீரின் விலை பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(அ) நீர்ப்படகுகள் அல்லாத மிதக்கும் மரக்கலங்களுக்கு நீர் வழங்கப்படுமிடத்து, கன மீட்டருக்கு ரூ. 1.65 சதம் அல்லது 1,000 கலனகளுக்கு ரூ. 7.50 சதம் ;

(ஆ) நீர்ப்படகுகளுக்கு நீர் வழங்கப்படுமிடத்து, கனமீட்டருக்கு ரூ. 1.32 சதம் அல்லது 1,000 கலன்களுக்கு 6 ரூபா ;

(3) (1) ஆம் (2) ஆம் பந்திகளின் நோக்கங்களுக்காக, 5 கன மீட்டரின் ஏதேனும் எஞ்சியுள்ள பின்னம் அல்லது 5 கன மீட்டருக்குக் குறைவான ஏதேனும் அளவு 5 கன மீட்டரென கணிக்கப்படுதல் வேண்டும். அல்லது பயனீட்டனவானது கலன் மூலம் அளிக்கபபடுமெனின், 1,000 கலன்களின் ஏதேனும் எஞ்சியுள்ள பின்னம் அல்லது 1,000 கலன்களுக்குக் குறைவான ஏதேனும் அளவு 1,000 கலன்களெனக் கணிக்கப்படுதல்வேண்டும்.";

(4) அதன் 35 ஆம் ஒழுங்குவிதியில்—

(அ) அவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் " காலாண்டொன்றுக்கு " என்பதிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதினை இடுவதன் மூலமும் :—

| | காலாண்டொன்றுக்கு<br>ரூ. ச. | | ஆண்டொன்றுக்கு<br>ரூ. ச. |
|---|---|---|---|
| முதலாவது அரை ஏக்கருக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. | 22 50 | .. | 90 00 |
| முதலாவது அரை ஏக்கருடன் சேர்த்து ஒவ்வொரு கால் ஏக்கருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் .. .. .. | 7 50 | .. | 30 00"; |

(ஆ) அதன் (2) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

" (2) விற்பனைக்கென அல்லது வாடகைக்கென குதிரைகள் கால்நடை, அல்லது வாகனங்கள் வைத்திருக்கப்படும் வளவுகளுக்கு வழங்கப்படும் நீருக்கு :—

| | மாதமொன்றுக்கு<br>ரூ. ச. |
|---|---|
| வண்டி அல்லது விசைப்பொறி ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 5 00 |
| இழுப்புவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 1 25 |
| குதிரை அல்லது கோவேறு கழுதை ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 4 00 |
| கழுதை ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 1 75 |
| எருது ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 1 75 |
| மாட்டுவண்டி ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 1 25"; |

(இ) அதன் (4) ஆம் பந்தியில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அதன் (அ) என்னும் உட்பந்தியில், " ஒவ்வொரு சதுர அடிக்கும் இரண்டு சதம் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " தொண்ணூறு சதுர சென்றிமீட்டரைக் கொண்ட ஒவ்வொரு கூறுக்கும் ஒருசதம், அல்லது ஒவ்வொரு சதுர அடிக்கும் 10 சதம் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்";

(ii) அதன் (ஆ) என்னும் பந்தியில், " ஒவ்வொரு கனஅடிக்கும் ஒரு சதம் "என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் கன சென்றிமீட்டரைக்கொண்ட ஒவ்வொரு கூறுக்கும் ஒருசதம், அல்லது ஒவ்வொரு கன அடிக்கும் ஐந்து சதம் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்"; அத்துடன்

(iii) (ஆ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் " ஆயிரம் கலன்களுக்கு ஒரு ரூபா " என்னும் சொற்களுக்குப் பதிலாக " கனமீட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபா பதது சதம் " " அல்லது ஆயிரம் கலன்களுக்கு ஐநது ரூபா " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.";

(ஈ) ஆறும் பந்தியில் " (ஏதேனும் தொட்டியின் கொள்ளளவு 80 கலன்களை விஞ்சலாகாது), காலாண்டொன்றுக்கு 14 ரூபா " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக " (ஏதேனும் தொட்டியின் கொள்ளளவு 500 லீட்டர்களை அல்லது 110 கலன்களை விஞ்சலாகாது), காலாண்டொன்றுக்கு 70 ரூபா." என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(உ) அதன் (7) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(7) வீட்டுத் தேவைகளுக்கென வழங்கப்பட்டதும், வாகனங்களைக் கழுவுவதற்காக வெளிப்புறக் குழாயொன்றின் மூலம் பயன்படுத்தப்பட்டதுமான நீருக்கு—

| | வெளிப்புறக் குழாய் தொடர்பில் நெளி குழாயொன்று அல்லது அதேவிதமான கருவியொன்று பயன்படுத்தப்படின் | | வெளிப்புறக்குழாய் தொடர்பில் நெளிக்குழாயொன்று அல்லது அதேவிதமான கருவியொன்று பயன்படுத்தப்படாவிடின் | |
|---|---|---|---|---|
| | மாதமொன்றுக்கு | ஆண்டொன்றுக்கு | மாதமொன்றுக்கு | ஆண்டொன்றுக்கு |
| (அ) ஒரு வாகனத்திற்கு .. | 5 00 .. | 60 00 .. | 3 75 .. | 45 00 |
| (ஆ) ஒன்றுக்கு மேற்பட்டஒவ்வொரு வாகனத்திற்கும் .. | 3 75 .. | 45 00 .. | 2 50 .. | 30 00"; |

(5) அதன் 36 ஆம் ஒழுங்குவிதியில், "ஆளொருவருக்கு 50 சதம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஆளொருவருக்கு 2 ரூபா 50 சதம்" என்னும் சொற்களையும் எண்களையும்இடுவதன் மூலமும் ;

(6) அதன் 42 ஆம் ஒழுங்குவிதியில், "கருதப்படல் வேண்டும்" என்பதிலிருந்து அவ்வொழுங்கு விதியின் முடிவுரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் கருதப்படல் வேண்டும் :—

| | | |
|---|---|---|
| 10 அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 250 ரூபா |
| 8 அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 220 ரூபா |
| 6 அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 150 ரூபா |
| 4 அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 140 ரூபா |
| 3 அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 90 ரூபா |
| 2 அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 50 ரூபா |
| $1\frac{1}{2}$ அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 36 ரூபா |
| 1 அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 20 ரூபா |
| $\frac{3}{4}$ அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 16 ரூபா |
| $\frac{1}{2}$ அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 14 ரூபா |
| $\frac{1}{4}$ அங்குல மானி .. | காலாண்டொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 6 ரூபா |

அதன் அளவு மெற்றிக்கு அலகுகளில் குறிக்கப்பட்டுள்ள மானியொன்றின் விடயத்தில், ஒவ்வொரு, 20 மில்லிமீட்டரும் 1 அங்குலத்திற்குச் சமன் என்ற அடிப்படையில், மேற்படி வீதங்களில், வாடகையானது கணிக்கப்படல் வேண்டும். மானியொன்றின் அளவானது மேற்கூறப்பட்டவாறு அங்குலத்திற்கு மாற்றப்படும் பொழுது, மேற்குறித்துரைக்கப்பட்டுள்ள மானியின் எந்த அளவுக்கும் சமமாகவில்லாதவிடத்து, மேற் குறித்துரைக்கப்பட்டுள்ளதும் அவ்வாறு மாற்றப்பட்டபோது உள்ள அளவை விட அடுத்துப் பெரிதாகவுள்ளதுமான மானியின் அளவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வீதத்தின்படி, வாடகையானது கணிக்கப்படுதல் வேண்டும். " ;

(7) அதன் 46 ஆம் ஒழுங்குவிதியில், "20 ரூபா கட்டணம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "40 ரூபாக் கட்டணம்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் " ; அத்துடன்

(8) அதன் ' அ ' என்னும் படிவத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ' அ ' என்னும் படிவத்தை இடுவதன் மூலமும் :—

**' அ ' என்னும் படிவம்**

**(4 ஆம் ஒழுங்குவிதி)**

வீட்டுத் தேவைகள் அல்லாத வேறு தேவைகட்கு மானி மூலம் நீர் வழங்குவதற்கென ஒரு சார்பில் (இதனகத்துப் பின்னர் " சொந்தக்காரர் " எனக் குறிப்பிடப்படும்) ........................................ என்பவருக்கும் மறு சார்பில் மாநகரசபைக்குமிடையில் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கை.

2. ...................... ஆம் இலக்கத்தைக் கொண்ட மேற்கூறிய வளவுக்கு வீட்டுத் தேவைகளல்லாத வேறு தேவைகட்கு அதாவது (அ), (ஆ), (இ) என்பவற்றுக்காக நீர் வழங்கல் அனுமதிக்கப்படுவதற்கு எதிர்ப்பயனாக, இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரிக்கச் சொந்தக்காரர் இத்தால் உடன்படுகிறார். அதாவது :—

(அ) நீரானது ............................ மானியொன்றின் மூலம் வழங்கப்படல் வேண்டும் என்பது ;

(ஆ) ...................... மானியின் வாடகையாக முற்பணமாகக் காலாண்டொன்றுக்கு ........................ ரூபாப் பணத்தொகையைச் சொந்தக்காரர் மாநகரசபைக்கு செலுத்துதல் வேண்டும், அல்லது செலுத்துவித்தல் வேண்டும் என்பது ;

(இ) அம்மாதத்தின்போது வழங்கப்பட்ட நீரளவுக்கு *கனமீட்டருக்கு / ஆயிரம் கலன்களுக்கு ...................... ரூபா என்ற வீதத்தில் கொழும்பு மாநகரசபைக்குச் சொந்தக்காரர் பணம் செலுத்துதல் வேண்டும், அல்லது செலுத்துவித்தல் வேண்டும் என்பது முதலாவது கொடுப்பனவு ஆண்டு ...................... மாதம் ................முதலாம் நாளன்று செய்யப்படல்வேண்டும்.

3. மானியின் வாடகை அல்லது நீருக்கான கட்டணங்கள் செலுத்தப்படவேண்டிய தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அவை மாநகரசபைக்குச் செலுத்தப்படாவிடில், நீர்ச்சேவையைப் பயன்படுத்தும் உரிமை இழக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், மாநகரசபை நீர் வழங்கலை நிறுத்தியும் விடலாம்.

4. கொழும்பு மாநகரசபை நீர்வேலைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளும், அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளும் இவ்வுடன்படிக்கையின் பகுதியாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் எவையேனும் பிரிவுகளின் கீழ் இதன்பின்னர் ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகள் எவையும், இவ்வுடன்படிக்கைக்கான திறத்தவர்களைப் பிணித்தலும் வேண்டும்.

5. ஒரு திறந்தவர் மறுதிறந்தவருக்கு உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான தமது அல்லது அதன் உட்கருத்துப்பற்றி ............ நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் கொடுப்பதன் மூலம் இவ்வுடன்படிக்கை முடிவுறுத்தப்படலாம். அது அவ்வாறு முடிவுறுத்தப்படுமிடத்து, உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்படும்வரை வரவுகளின் சொந்தக்காரரோ, குடியிருப்பாளரோ நீர்ச்சேவையைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

6. குடியிருப்பாளர்கள் மாறவிருக்கும்போதெல்லாம் சொந்தக்காரர் உரிய அறிவித்தல் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், குடியிருப்பாளர் எவரும், மேற்கூறிய நிபந்தனைகளை அனுசரிக்க எழுத்தில் உடன்படும்வரை நீர்ச்சேவையைச் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

19............ ஆம் ஆண்டு ................ மாதம் ............ ஆம் நாளாகிய இன்று கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

..............................
சொந்தக்காரர்.

..............................
நீர்வேலைகள் எந்திரி,
மாநகரசபை சார்பில்.

கையொப்பங்களுக்கான சாட்சிக்காரர்கள் :

(1)

(2)

மேற்கூறியஉடன்படிக்கையின நியதிகளை அனுசரிக்கவும் நான் உடன்படுகிறேன்.

19........ ஆம் ஆண்டு ............ மாதம் ............ ஆம் நாளாகிய இன்று கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

..............................
குடியிருப்பாளர்.

கையொப்பத்துக்கான சாட்சிக்காரர்கள்

(1)
(2)

*பொருத்தமில்லாத சொற்களை கிறிவிடவும்.

(9) அதன் 'இ' என்னும் படிவத்தில் " கனஅடி " என்னும் சொற்களை விட்டு விடுவதன் மூலமும் ; அத்துடன்

(10) அதன் 'உ' என்னும் படிவத்தில் " 1,000 கலன்களுக்கு " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக " கனமீட்டருக்கு 1,000 கலன்களுக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது